**காற்றால் நிரப்பக் கூடிய மற்றும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக்கூடிய 30 சென்டி மீட்டர் (சராசரியாக ஒரு அடிமட்டத்தின் ஆழம்) ஆழத்திற்கும் குறைவான அளவு தண்ணீரைக் கொள்ளக் கூடிய நீச்சல் தொட்டிகளுக்கு:**

- நீச்சல்தொட்டியைப் பயன்படுத்தாத **அனைத்து வேளைகளிலும் அதைக் காலி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.** காலி செய்யும் தண்ணீரை தோட்டத்திற்கோ அல்லது வீட்டில் வேறு பகுதிகளில் ஏதாவது வேலைகளுக்கோ மீள்சுழற்சி முறையில் பயன்படுத்தலாம். நீச்சல் தொட்டியில் தண்ணீரை அப்படியே விட்டு வைப்பது குழந்தைகள் மூழ்கும் அபாயத்தை ஏற்படுத்தும், மற்றும் தொட்டியில் தேங்கியுள்ள தண்ணீர் அசுத்தமடைந்து சுகாதாரக் கேடுகளை விளைவிக்கக் கூடும்.
- பயன்படுத்தப்படாமல் இருக்கும் வேளைகளில் நீச்சல் தொட்டிகளை சிறு குழந்தைகள் அணுகாதவாறு **தூரமாகத் தள்ளி வைக்கவும்.** தொட்டிகளை நேராக நிமிர்த்தி வைப்பதன் மூலம் மழை அல்லது அருகாமையிலுள்ள நீர்த்தெளிப்பான்கள் ஆகியவற்றின் காரணமாக தொட்டியில் சிறு அளவில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கலாம்.







**பின்வரும் விடயங்களை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்:**

- குழந்தைகள் தண்ணீரிலோ அல்லது தண்ணீருக்கு அருகிலோ இருக்கும்பேது கைக் எட்டும் தூ ரத்திலிருந்து அவர்களைக் கண்காணியுங்கள்.
- வயதுகூடிய சகோதரங்களில் ஒருவரால் குழந்தை ஒன்றை கவனித்துக் கொள்ள இயலும் என்று நீங்கள் முழுதாக நம்பினாலும், வயதில் குறைந்த குழந்தையைக் கண்காணிக்கும் பொறுப்பை பெரிய குழந்தைகளை நம்பி அவர்களிடம் விடக்கூடாது. அப்படிப்பட்ட பொறுப்பை ஏற்கும் திறன் குழந்தைகளுக்குக் கிடையாது.
- **சிசுக்களுக்கும் சிறு குழந்தைகளுக்கும் உரிய CPR (Cardio Pulmonary Resuscitation) என்று சொல்லப்படும் 'மீள் சுவாச சிகிச்சை' முறையைக் கற்றுக் கொள்ளுங்கள்.**
- தண்ணீரில் பழகவும், நீந்தவும் உங்கள் பிள்ளைக்குக் கற்றுக் கொடுங்கள், ஆனால் அவர்கள் தண்ணீரில் மூழ்க வாய்ப்பில்லை என்று நீங்களாகவே யூகம் செய்து கொள்ளாதீர்கள்.

**குழந்தைகள் தண்ணீரில் மூழ்க சில நொடி நேரமே ஆகும்**

kids health
the children's hospital at Westmead
Child Health Promotion Unit

**எவ்வொரு சேவை நிறுவனத்துடனும் தொடர்பு கொள்ள உரைபெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால் 131 450 எனும் இலக்கத்தில் 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை (Translating and Interpreting Service (TIS)) யினை அழையுங்கள்.**

மேலதிக விபரங்களுக்கு, 'வெஸ்ட்மெட் குழந்தைகள் மருத்துவமனை'யிலுள்ள 'குழந்தைகள் உடல்நலம்' எனும் பிரிவுடன் (02) 9845 3585 எனும் இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது kidshealth.schn.health.nsw.gov.au/projects/drowning-prevention/inflatable-and-portable-pools எனும் வலைப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

kids Westmead

# சத்தம் எதுவும் இல்லாமலேயே குழந்தைகள் தண்ணீரில் மூழ்கி விடக்கூடும்!

Tamil

இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக்கூடிய சிறிய அல்லது பெரிய நீச்சல்தொட்டிகளில் கூட சில நொடி நேரத்தில் குழந்தைகள் மூழ்கி விடக் கூடும்!



kids health
the children's hospital at Westmead
Child Health Promotion Unit

ctcper
the children's hospital at Westmead
The Centre for Trauma Care, Prevention, Education and Research

NSW GOVERNMENT

the children's hospital at Westmead

# சத்தம் எதுவும் இல்லாமலேயே குழந்தைகள் தண்ணீரில் மூழ்கி விடக்கூடும்!

## ஐந்து வயதிற்கும் குறைந்த வயதுடைய குழந்தைகளின் இறப்பிற்கு தண்ணீரில் மூழ்குவதே பிரதான காரணம்!

குளங்கள் ஆபத்தானவை என்பது தெரிந்ததே, ஆனாலும் தொட்டிகள், நீரணைகள், ஆறுகள், ஓடைகள், தோட்டங்களிலுள்ள குட்டைகள் மற்றும் துணி கழுவ நாம் பாவிக்கும் வாளிகளில் கூட குழந்தைகள் மூழ்கிவிடக் கூடும். குழந்தைகளின் தலை அவர்களது உடல்களைவிட அதிக பாரமாக இருப்பதால், தண்ணீரில் குழந்தைகள் தலை குப்புறமாக இருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டால் அதற்குப் பிறகு குழந்தைகளால் நேராக நிமிர்ந்துகொள்ள இயலாது. குழந்தை தண்ணிரில் மூழ்கினால் சத்தம் கேட்கும் என்று பெரும்பாலான பெற்றோர்களும் கவனிப்பாளர்களும் கருதுவார்கள். இருந்தாலும், இது உண்மை அல்ல. ஏனெனில் குழந்தையின் சுவாசப் பாதையில் தண்ணீர் ஏறி அடைத்துக்கொள்வதால் சத்தம் வெளிவராமல் அடைபட்டுப் போய்விடக் கூடும். தண்ணீரில் மூழ்குவது என்பது சத்தம் எதுவுமே கேட்காமல் மிகவும் துரிதமாக நடந்துவிடும் ஒரு நிகழ்வாகும்.

- வீட்டுப் பின்புறத்திலுள்ள நீச்சல்தொட்டில்களில் மூழ்கி இறக்கும் குழந்தைகளில் கால் வாசிக்கும் மேற்பட்ட குழந்தைகள் காற்று ஊதி அடைக்கக் கூடிய அல்லது கையில் எடுத்துச் செல்லக்கூடிய நீர்த் தொட்டிகளில்தான் இறக்கின்றனர்.
- வாழ்நாள் முழுதும் நீடிக்கும் மூளைச் சேதாரத்தை ஏற்படுத்தும் ‘கிட்டத்தட்ட மூழ்கிப் போகும்’ வகையில் ஏற்படும் நிகழ்வுகள் பலவாகும்.

காற்றால் நிரப்பக் கூடிய மற்றும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக் கூடிய நீச்சல் தொட்டிகளை பல குடும்பங்கள் விரும்பித் தெரிவு செய்கின்றன. ஆனால், இந்த நீச்சல் தொட்டிகளை வைத்திருப்போர் அறிந்து கவனத்தில் கொள்ள வேண்டிய அபாயங்கள் உள்ளன.

வேலிகள் அமைக்கப்பட்டுள்ள நீச்சல்குளங்களை விட காற்று நிரப்பக்கூடிய மற்றும் கையில் எடுத்துச் செல்லக்கூடிய நீச்சல் தொட்டிகள் குழந்தைகளுக்கு அதியளவு ஆபத்து விளைவிக்கக் கூடியவை என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் இந்த நீச்சல்தொட்டிகளுக்கும் வேலி போட்டு வைக்க வேண்டும் என்பது பலருக்கும் தெரியாது, மற்றும் சில நீச்சல்தொட்டிகள் பெரிதாக இருக்கும் காரணத்தினால் அவற்றைக் காலி செய்வது இயலாத காரியமாகும். இதன் காரணமாக தண்ணீரில் மூழ்குவதற்கான ஆபத்தை மிக அதியளவில் ஏற்படுத்தும் விதத்தில் குழந்தைகளால் இந்த நீச்சல் தொட்டிகளை எளிதில் சென்று அடைய முடிகிறது.

**காற்று ஊதி அடைக்கக்கூடிய மற்றும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக்கூடிய நீச்சல் தொட்டிகள் அபாயகரமானவை!**

சிறு குழந்தைகளை ஒவ்வொரு நிமிடமும் நாள் முழுக்க மேற்பார்வை செய்து தமது கண்காணிப்பிலேயே வைத்திருப்பதென்பது கஷ்டமாகிப் போகும் வேளைகள் பெற்றோருக்கும் கவனிப்பாளர்களுக்கும் கட்டாயம் இருக்கும். வீட்டுப் பின்புறத்திலுள்ள நீச்சல் குளங்கள் மற்றும் தொட்டில்களில் மூழ்கி இறக்கும் குழந்தைகளில் பலா் அவர்களது பெற்றோா் மற்றும் கவனிப்பாளர்களுக்குத் தெரியாமலேயே தண்ணீரில் மூழ்கி இறக்கின்றனா்.

தண்ணீருக்கு அருகாமையில் குழந்தைகள் இருக்கும்போது அவர்களை மேற்பார்வை செய்து கண்காணிப்பில் வைத்திருப்பதே அவர்களை மூழ்குவதிலிருந்து பாதுகாக்கும் சிறந்த பாதுகாப்பாகும். இருந்தாலும், உடுப்புகளைக் கொடியில் உலர்த்தப் போடுவதற்காகப் போவது மற்றும் தொலைபேசி அழைப்பை எடுப்பதற்காகப் போய்விடுவது போன்ற அன்றாட அலுவல்களின் காரணமாக பெற்றோர்கள் மற்றும் கவனிப்பாளரது கவனம் வேறு பக்கம் எளிதில் திரும்பிவிடும்.

எனவேதான், நீச்சல்குளம் மற்றும் தொட்டிகளுக்குப் போடும் வேலியானது குழந்தைகள் தண்ணீருக்கு அருகில் போவதைத் தடுக்கும் மிக முக்கியமான இரண்டாவது மட்ட பாதுகாப்பாக அமைகிறது. உங்கள் நீச்சல்குள வேலியானது பாதுகாப்பானதா மற்றும் சட்ட விதிமுறைகளுக்கு இது உட்பட்டிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள உதவும் யோசனைக் குறிப்புகளை ‘குழந்தைகள் நல’(முனைள ர்நயடவா) இணையதளத்தில் உள்ள ‘உங்கள் நீச்சல் குளத்தைப் பாதுகாப்பாக வைத்திருங்கள்’ மற்றும் ‘உங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருங்கள்’ என்ற தலைப்புகளின் கீழ் உள்ள சரிபார்க்கும் பட்டியல்களில் காணலாம். இந்தச் சரிபார்க்கும் பட்டியல்கள் பல சமுதாய மொழிகளில் கிட்டும்.

### 30 செண்டி மீட்டருக்கும் (சராசரியாக ஒரு அடிமட்டத்தின் ஆழம்) அதிக ஆழமுள்ள தண்ணீரைக் கொள்ளக் கூடிய காற்றால் அடைக்கப்படக் கூடிய பெரிய நீச்சல் தொட்டிகள் மற்றும் இடம் விட்டு இடம் எடுதிதுச் செல்லக்கூடிய நீச்சல் தொட்டிகளுக்கு:

- காற்றால் அடைக்கப்படக் கூடிய பெரிய நீச்சல் தொட்டிகள் மற்றும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக்கூடிய நீச்சல் தொட்டிகளைச் சுற்றி உங்களால் வேலி போட இயலும் என்றால் மட்டுமே இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
- 30 செண்டி மீட்டருக்கும் (சராசரியாக ஒரு அடிமட்டத்தின் ஆழம்) அதிக ஆழமுள்ள தண்ணீரைக் கொள்ளும் காற்றால் அடைக்கப்படக் கூடிய பெரிய நீச்சல் தொட்டிகள் மற்றும் இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக்கூடிய நீச்சல் தொட்டிகளைச் சுற்றி நான்கு பக்கமும் வேலி போட்டிருக்காவிட்டால் அபராதங்கள் செல்லுபடியாகும்.



